செய்தி வெளியீடு எண் : 395 நாள் : 28.02.2023

**மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய 6 மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (28.02.2023) நடைபெற்றது.**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய 6 மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (28.02.2023) சென்னை, மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மூலம் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை, புதிதாக கட்டப்பட்டு வரும் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், நினைவகங்களின் புனரமைப்புப் பணிகள், மாவட்டங்களில் தமிழரசு சந்தா குறித்து நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைப் பூர்த்தி செய்தல், "**ஓயா உழைப்பின் ஓராண்டு**" சாதனைகள், திட்டங்கள் குறித்த புகைப்பட கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்திய விவரம், திறந்த வெளி விளம்பரம் மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் கள விளம்பரப் பணிக்களுக்கான தரவரிசைப் பட்டியல், சமூக ஊடகங்களை கையாளுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து மண்டல வாரியாக மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில், "மாவட்டங்களில் நிலுவையில் உள்ள பணிகளை தொய்வின்றி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சிலைகள் மற்றும் அரங்கங்கள் அமைப்பது தொடர்பாக ஏதேனும் இடர்பாடுகள் இருப்பின் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து விரைவாக பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மாவட்டங்களில் உள்ள நினைவகங்களில் நடைபெறும் புதிய பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்துச் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களால் அரசின் திட்டங்கள் குறித்து மாதந்தோறும் மேற்கொள்ளப்படும் செய்தியாளர் பயணம் மிக முக்கியமான பணியாகும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மக்கள் தொடர்பு முகாம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு சென்று திரும்பும்போது திட்டப்பணிகள் நடைபெறும் இடங்களில் செய்தியாளர் பயண நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து செய்தியாளர்களை அழைத்துச் சென்று முழு ஈடுபட்டுடன் செய்து முடிக்க வேண்டும். தமிழரசு சந்தா சேர்ப்பதற்கான இலக்கினை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், தமிழரசு சந்தா சேர்ப்பது தொடர்பான விளக்கங்களை தங்களது அலுவலக விளம்பர பலகைகளில் விளம்பரமாகவும், பள்ளி, கல்லூரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், நூலகங்கள், அரிமா சங்கங்கள் போன்றவற்றை அணுகியும் இலக்கினை முழுமையாக எட்ட வேண்டும் எனவும், இதனால் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் எளிதில் மக்களிடம் சென்றடைந்து பொதுமக்கள் பயனடைய வாய்ப்பாக இருக்கும் எனவும் அறிவுறுத்தினார்.

மாவட்டங்களில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகள், தமிழறிஞர்கள் ஆகியோர்களின் புகைப்படங்களுடன் கூடிய சிறு குறிப்புகள் அனைத்து மாவட்ட ஆட்சியரகங்களிலும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. இதைப்போன்று மாவட்டங்களில் உள்ள சுதந்திரப் போராட்ட தியாகிகளின் பிறப்பு, இறப்பு, ஈடுபட்ட போராட்டங்கள், சிறையில் இருந்த காலம், தியாகங்கள், வாரிசுதாரர்கள் குறித்த சிறுகுறிப்புடன் அவர்களது புகைப்படத்தையும் இணைத்து காலப்பேழை (Album) தயாரித்து பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் இடங்களான மாவட்ட ஆட்சியரகம், நூலகங்கள், நினைவகங்கள் போன்ற இடங்களில் வைத்தால் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டு அறிந்து கொள்வார்கள். இதன் மூலம் அத்தியாகிகளின் உயரிய தியாகங்களை வெளிக்கொணரவும், எதிர்கால சந்ததியினர் அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள ஒரு நல்ல வாய்ப்பாக இருப்பதுடன், அவர்களின் குடும்பத்தாரும் மகிழ்ச்சி அடைவார்கள் எனவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசின் முக்கிய திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் திறந்தவெளி விளம்பரங்கள் மேற்கொள்ளப்படும்பொழுது போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாமலும், பொதுமக்கள் பார்வையில்படும் வகையிலும், அனுமதி பெற்ற இடங்களிலும் விளம்பரப் பலகைகள் அமைத்திட வேண்டும், "**தலைநிமிர்ந்த தமிழ்நாடு! தனித்துவமான பொன்னாடு**!" என்ற தலைப்பையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தையும், திட்டத்தினால் ஏற்படும் பயன்களையும், பயன்பெறும் முறைகளையும் திறந்தவெளி விளம்பரப் பலகைகளில் இடம் பெறச் செய்ய வேண்டும், இரண்டாண்டுகள் முடிந்து மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இச்சூழ்நிலையில் உங்கள் மாவட்டங்களில் நம் துறை சார்பாக நடைபெறும் அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார். முன்னதாக, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.த.மோகன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். மேலும், திரு. சிவ.சு. சரவணன், கூடுதல் இயக்குநர் (செய்தி), திரு. மு.பா. அன்புச்சோழன், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு), இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in